சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக் குழந்தைகளிலிருந்து கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப் பைகளைக் கொடுத்து இனாம் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 04 ஞாயிற்றுக்கிழமை (20 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 361

# மாவீரர்வாரத்தில்புலிகள்தாக்கலாம்என
# அரச படைகள் மிக உஷார் நிலையில்!

### இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, நவம்பர் 20

''மாவீரர் வாரம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் நாற்பதாவது பிறந்ததினம் ஆகிய இரு முக்கிய நிகழ்வுகளை ஒட்டி விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் களை நடத்தக்கூடும். அத்தகைய நிலையை எதிர்கொள்வதற்காகப் படையினர் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.''

ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரி ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

''விடுதலைப் புலிகள் விடுத்த இராணுவ நடவடிக்கை நிறுத்த அறிவிப்புக் குறித்து இராணுவம் அதிக கவனம் செலுத்தவில்லை

''முன்னரும் இத்தகைய போர் இடைநிறுத்தங்களுக்குப் பின்னர் பாரிய தாக்குதல்களைப் புலிகள் மேற்கொண்டுள்ளனர். எனவே இம்முறையும் இடம்பெறக் கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ள படையினர் தயாராகவிருக்கின்றனர்.'' — என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதற்கிடையில் —

இம்முறை மாவீரர் வாரத்தின் போது புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ள மாட்டார்கள் என ''புளொட்'' அமைப்புத் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

''மாவீரர் வாரத்தில் ஆயுதப்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பங்களாதேஷில் 4 தமிழர் கைது

மணிலா, நவ. 20

பங்களாதேஷில் வைத்து தமிழர்கள் நால்வரை பங்களாதேஷ் பொலிஸார் கைது செய்துள்ளனர் என வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

ரூ. 4 கோடி 40 லட்சம் அறவிட

## தொண்டா குடும்பம் மீது சட்ட நடவடிக்கை வரும்

### 'ஏயர் லங்கா' ஏற்பாடு

கொழும்பு, நவ. 20

அமைச்சர் தொண்டமானின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து நிலுவையாக அறவிட வேண்டியிருக்கும் சுமார் 4 கோடி 40 லட்சம் ரூபா பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க 'ஏயர் லங்கா' நிறுவனம் தயாராகி வருவதாக அந் நிறுவனத்தின் தலைவர் சேபால ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

சென்னை, திருச்சி நகரங்களில் ஏயர் லங்காவின் ரிக்கெட் முகவர்களாக தொண்டமானின் பேரன் இயங்கி வருவதும்—

கடந்த ஐ.தே.க. அரசில் தொண்டமான் சுற்றுலாத்துறை அமைச்சராக இருந்த வேளை அவரின் பேரன் பொறுப்பாக இருக்கும் முகவர் நிலையம் ஏயர் லங்காவுக்குக் கட்டவேண்டிய நிலுவைத் தொகை 4 கோடி ரூபாவைத் தாண்டிச் சென்றது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ-6)

லஞ்சம் வழங்க முனைந்த சம்பவம்:

## சந்திரிகாவின் வாக்குமூலம் பதிவதற்கு ஏற்பாடு

கொழும்பு, நவ. 20

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரு நபர்கள் மீது சுமத்திய லஞ்ச முறைப்பாடுகள் தொடர்பாக அவரின் வாக்குமூலத்தை லஞ்ச ஆணையாளர் நெலும் கமகே இம்மாத முடிவிற்குள் பதிவு செய்வார்.

'சண்டே ரைம்ஸ்' வார இதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

சந்திரிகாவின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்ய ஜனாதிபதித் தேர்தலின்போது லஞ்ச ஆணையாளர் முயற்சி எடுத்தார். எனினும் தேர்தல் பிரசார அலுவல்களில் சந்திரிகா மூழ்கியிருந்தபடியால் அவரின் வாக்குமூலம் அப்போது பதிவுசெய்யப்பட முடியாமல் போய்விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### ஹெலி தாக்கு

வல்வெட்டித்துறை நவ. 20

வல்வெட்டித்துறையில் இருந்து தொண்டமானாறு வரையிலான பகுதிகளில் நேற்றுக்காலை ஹெலிக்கொப்டர் ஒன்று பரவலாகத் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலின்போது மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். சில இடங்களில் குடியிருப்புகள் மற்றும் மீன்பிடிப் படகுகள் சேதமடைந்தன. (இ-11-173-155)

### முச்சந்தி முரளி



அப்ப இழுபறியை தீர்க்க அமைச்சர் எண்ணிக்கையை அதிகரிப்பினமோ......!

## பிரதி அமைச்சர்கள் நியமனத்தில் இழுபறி

### தாமதத்துக்கு இதுவே காரணமாம்

கொழும்பு, நவ. 20

பிரதி அமைச்சர்கள் நியமன விவகாரத்தில் அரசில் சிறிய முரண்பாடு தோன்றியிருப்பதாக தெரியவருவதாக பி. பி. ஸியின் சிங்களச் சேவைச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த ஒகஸ்ட் டில் பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் பிரதி அமைச்சர்களை நியமித்தபோது ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை நீக்கிக் கொள்ளும் வகையில் இம்முறை பிரதி அமைச்சர்கள் நியமனத்தை மேற்கொள்ள அரசு முயற்சிக்கின்றது என்றும்—

அதனால்தான் இந்த நியமனங்கள் தாமதமாகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் நியமனத்தில் சுதந்திரக்கட்சிக்கு முன்னுரிமை அளிக்கும் அதே நேரத்தில் ஏனைய அரசியல் கட்சிகளுக்கு பாதகமில்லாத முறையிலும் நடக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 1 வார யுத்த நிறுத்தம் நேற்றுடன் காலாவதி

கொழும்பு நவ. 20

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகாவுக்கும் அவரது அரசுக்கும் நல்லெண்ண சமிக்ஞையாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் விடுத்த ஒருவார கால இராணுவ நடவடிக்கை நிறுத்த அறிவிப்பு நேற்றுடன் முடிவடைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் ஒரு வார காலத்தை தாக்குதல் அற்ற வாரமாகக் கடைப் பிடிக்குமாறு புலிகள் தமது படையினருக்கு உத்தரவிட்டிருந்தனர்.

இதன்படி ஒருவார காலம் நேற்றுடன் முடிவடைந்ததாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இராணுவ நடவடிக்கையை நிறுத்திய கால கட்டத்தில் அதனை உதாசீனம் செய்யும் பல செயல்களில் 'ஸ்ரீலங்காப் படைகள் ஈடுபட்டதையும்—

தலைவர் பிரபாவின் நல்லெண்ண சமிக்கைக்கு பதிலாக நல்லெண்ண அறிவிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்திடம் ஆயுதம் பெற்ற அரசியல்வாதிகள்

### பொலீஸாருக்கு விவரம் தெரியாது

கொழும்பு, நவ. 20

கடந்த அரசின் காலத்தில் இராணுவத்திடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகள் பற்றிய விவரத்தை பொலீஸுக்கு இராணுவத் தலைமைப்பீடம் இன்னும் தெரிவிக்கவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இராணுவம் ரி- 56 ரக ரைபிள்களையும், ரவைகளையும் ஐ. தே. க அரசின் காலத்தில் அரசியல்வாதிகள் சிலருக்கு வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகளுக்கு பொலீஸும் இராணுவமும் ஆயுதங்களை வழங்கியுள்ளன.

எனினும் அரசியல்வாதிகளுக்கு ஆயுதங்களை வழங்க இராணுவத்திற்கு அதிகாரம் உண்டா என்பது தெளிவாக்கப்படவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி த ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல்வாதிகளுக்கு ஆயுதம் வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களாக முன்னர் பணிபுரிந்த இருவர் அனுமதி வழங்கினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# யுத்த நிறுத்தக் காலத்தில் மட்டக்களப்பில் தாக்குதல்!

### மேஜர் கருணாகரன் உட்பட 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 20

விடுதலைப் புலிகளின் ஒருவார கால யுத்த இடைநிறுத்த அறிவிப்பு வெளியான நாட்களில் மட்டக்களப்பில் படையினர் இரண்டுக்கு மேற்பட்ட தாக்குதல்களை நடத்தி உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல்கள் விடுதலைப் புலிகள் மீதும் பொது மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டன என்று புலிகளின் குரல் தெரிவித்தது.

யுத்த இடை நிறுத்த அறிவிப்பு வெளியான கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீலங்காப் படையினர் விடுதலைப் புலிப் போராளி ஒருவரை சுற்றி வளைத்தனர்.

இதனால் ஏற்பட்ட மோதலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மேஜர் கருணாகரன் வீரச்சாவடைந்தார்.

இவருடன் சேர்த்து தாக்குதல் இடைநிறுத்த அறிவிப்பு வெளியான பின் மூன்று விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

அத்துடன் கடந்த 15 ஆம் திகதி மாவடி முன்மாரி பிரதேசத்தில் வயல் பிரதேசங்களை உள்ளடக்கிய அனைத்துப் பகுதிகளிலும் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப்படையினர், இராணுவம், தேசத் துரோகிகள் கூட்டாக இணைந்து பாரிய சுற்றி வளைப்புகளை மேற்கொண்டனர்.

சுற்றி வளைப்புக்கு உள்ளான தமிழர்கள் மிகக் கொடுரமான முறையில் தாக்கப்பட்டனர். அத்துடன் ஐவர் கொண்ட குழுக்களாக அனைவரும் கட்டப்பட்டு வவுணதீவு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 4 பேர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை இவர்கள் தொடர்பான தகவல்களை பெற ஸ்ரீலங்கா படையினர் அனுமதி மறுத்து விட்டனர். (இ-9)

## மட்டக்களப்பில் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், நவ. 20

கடந்த 12 ஆம் திகதி மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப் படையினர் குடும்பஸ்தர் ஒருவரை சுட்டுக்கொன்றனர்.

ஆரயம்பதி- காத்தான் குடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாணிக்கப்போடி சுதாகரன் (35 - வயது) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். (இ-9)

## படையினர் சூடு மீனவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 20

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார். மீன்பிடி வள்ளமும் சேதமடைந்தது.

பூநகரி — சங்குப்பிட்டிக் கடற்பிராந்தியம், நாகதேவன் துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

குருநகரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மகேந்திரராசா (வயது 24 — மனோ) என்பவரே காயமடைந்தவராவார்.

சூடு பட்டதும் இவரும் இவருடன் கூடச்சென்ற இருவரும் கடலில் பாய்ந்தனர். ஏனைய இருவரும் காயமின்றித் தப்பிக்கொண்டனர். (இ-51-15)

ஆயுதங்களைத் தேடி

## முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் திடீர் சோதனை

கொழும்பு, நவ. 20

கடந்த அரசு வழங்கிய ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்காக முன்னாள் அமைச்சர்களின் வீடுகளை பொலிஸார் திடீர் சோதனைக்குட்படுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்கள் போல் பெரேரா, விஜேபால மெண்டிஸ் ஆகியோரின் வீடுகளைச் சோதனையிட்ட பொலீஸார் அவ்வீடுகளில் இருந்து சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றி உள்ளனர் என்பது தெரிந்ததே.

சட்ட விரோத ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்காக பொலீஸார் இதுவரை நடத்திய முற்றுகைகளின் போது 95 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 96 பேர் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் வாரம் தமிழீழமெங்கும் நாளை எழுச்சியுடன் ஆரம்பம்

### மாவீரர் ஆலயங்களில் காலை மதிப்புவணக்க நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் வாரம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

நாளை காலை 9 மணிக்கு யாழ். மாவட்டத்தின் சகல வட்டப் பிரதேசங்களிலும் மாவீரர் நாளையொட்டி அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்கள் வைபவ ரீதியாக — மதிப்பு வணக்கம் செலுத்துவதற்காக — திறந்து வைக்கப்பட உள்ளன.

மாவீரர் ஆலயங்கள் திறக்கும் வைபவங்களில், அந்தந்த வட்டங்களைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவுருவப் படங்கள் மக்களின் வீர வணக்கத்துக்காக வைக்கப்பட உள்ளன.

அந்த மாவீரர்களின் பெற்றோரை அந்தந்த வட்டங்களில் நடைபெறும் வைபவங்களில் கலந்து மலர் மாலை அணிவித்து சுடரேற்றிச் சிறப்பிக்குமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

கோட்ட, வட்ட ரீதியாக மாவீரர் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் விவரம்:-

**வலிகாமக் கோட்டம்**

யாழ் வட்டம் — வட்டச் செயலகம் முன்பாக, ஆரிய குளத்திற்கு அண்மையில்.

நல்லூர் வட்டம்— நாவலர் மண்டபம், நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றில்.

கோப்பாய் வட்டம் — நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் முன்றில்.

உடுவில்/தெல்லிப்பளை வட்டம் — சுன்னாகம் சந்தி.

சண்டிலிப்பாய் வட்டம் — மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் முன்றில்.

சங்கானை வட்டம் — சங்கானைச் சந்தி.

**வடமராட்சிக் கோட்டம்**

பருத்தித்துறை வட்டம் — கிராமக் கோட்டுச் சந்தி.

கரவெட்டி—வட்டம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்திற்கு அண்மையில்.

உடுப்பிட்டி வட்டம் — உடுப்பிட்டிச் சந்தி பிள்ளையார் கோவில் முன்றில்.

**தென்மராட்சிக் கோட்டம்**

[illegible] சந்தி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹபரண கப்பலை உடன் கொழும்பு திரும்ப உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 20

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் ''ஹபரண'' கப்பலை உடன் கொழும்புக்கு திரும்புமாறு அவசரஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்துகடந்த மாதம் இக்கப்பல் வடக்கு நோக்கிப் புறப்பட்ட போது துறைமுகச் சுவருடன் மோதி விபத்துக்குள்ளானது.

துறைமுகச்சுவருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதும்—

சேதத்துக்கான நஷ்டத்தை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதும்— தெரிந்தவையே.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்றத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜீரியாவை உள்நாட்டு யுத்தத்துக்கு இட்டுச்செல்லும்

# இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் எழுச்சி!

வடஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதிகள், பதவியில் இருக்கும் ராணுவ அரசாங்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அல்ஜீரியாவில் அரசாங்கத்தை வீழ்த்தி விட்டு இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் (Islamic Fundamen Talists) ஆட்சியை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

கடந்த இரண்டரை வருடங்களாக நடத்தப்படும் போராட்டத்தில் 10 ஆயிரம் அல்ஜீரியர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

அல்ஜீரியாவின் பிரதான வருவாய் தரும் துறைகளில் ஒன்றான உல்லாசப் பயணத்துறை பெரும் அளவில் — அதாவது முழு அளவில் ஸ்தம்பிதம் அடைந்து விட்டது.

### வெளிநாட்டவர் மீது தாக்குதல்

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பிரதான தாக்குதல் இலக்குகளில் ஒன்று அல்ஜீரியாவில் உள்ள வெளிநாட்டவர்களே.

### வெளி உலகில்

இதுவரை 70க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் அனேகமானோர் பிரெஞ்சுக்காரர்கள்.

அல்ஜீரியா — பிரான்ஸின் குடியேற்ற நாடாக 132 வருடங்கள் இருந்தது.

கடந்த இரண்டரை வருடகாலமாக அங்கு நடத்தப்படும் போராட்டம் பிரெஞ்சுக்காரர்களை மட்டும் அல்ல வெளிநாட்டவர்கள் அனைவரையுமே அல்ஜீரியாவில் இருந்து வெளியேற்றி வருகிறது. கடந்த வருடம் 8ஆயிரம் வெளிநாட்டவர்கள் அங்கு இருந்தனர். தற்போது சுமார் ஆயிரம் பேரே எஞ்சி உள்ளனர்.

அரசுக்கு ஆதரவான பத்திரிகையாளர்கள், கல்விமான்கள் மற்றும் வெளிநாட்டவர்கள், உல்லாசப் பயணிகளின் தலையைத் துண்டிக்கும் சம்பவங்கள் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன.

இந்தப் படுகொலையை தடுத்து நிறுத்த முடியாத நிலையில் ஜனாதிபதி லியானமன் ஷெறோலின் (Liamine Zeroual) அரசு இருந்து வருகிறது.

### போராட்டம் ஆரம்பித்தது எப்படி?

1992 ஜனவரியில் பல கட்சிகள் கலந்து கொள்ளும் சுதந்திரமான பொதுத் தேர்தலில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் Fis எனப்படும் இஸ்லாமிய விடுதலை முன்னணி (Islamic Salvation Front) வெற்றி அடைய இருந்த சமயம் தேர்தலை ரத்துச் செய்தது.

பதவியில் இருந்த ஜனாதிபதி சட்லி பென்ஜெடிட்டை பதவி துறக்கச் செய்து படையினர் அவசரகால நிலையைப் பிறப்பித்தனர்.

அன்றில் இருந்து இஸ்லாமிய விடுதலை முன்னணி நடத்தி வரும் போராட்டமே படிப்படியாக வளர்ச்சி அடைந்து தீவிரம் அடைந்துள்ளது.

தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணுமுகமாக 1995 இறுதிக்குள் அல்ஜீரியாவில் பொதுத் தேர்தலை நடத்தப்போவதாக ஜனாதிபதி லியான்மன் ஷெறோலின் சமீபத்தில் அறிவித்திருந்தார். ஆனால் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர்.

இஸ்லாமிய விடுதலை முன்னணி அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை அதன் தலைமறைவு தீவிரவாதப் பிரிவான இஸ்லாமிய விடுதலை ராணுவம் (Islamic Salvation Army) எதிர்த்து வருகிறது.

இஸ்லாமிய விடுதலை முன்னணியின் தலைவர் அபாஸி மடானி [Abassi mapani] உபதலைவர் அலி பெல்ஹாட்ஜ் [AlibelhaJ] ஆகியோர் அரசுக்கு எதிரான சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக சிறையில் 12 வருட காலச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இஸ்லாமிய அடிப்படை வாதிகளுக்கு ஒரு சலுகையாக சமீபத்தில் இவர்கள் சிறையில் இருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டனர்.

அரசாங்கத்துடன் இவர்கள் பேச்சு நடத்த முன்னர் தம்முடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று இஸ்லாமிய விடுதலை ராணுவம் கோரிவருகிறது. தலைமறைவு இஸ்லாமிய விடுதலை ராணுவத்தின் அச்சுறுத்தலால் இஸ்லாமிய விடுதலை முன்னணி சுயமாக செயற்பட முடியாத நிலையில் இருந்து வருகிறது.

அல்ஜீரியாவில் தற்போது நடைபெறும் உள்நாட்டு நெருக்கடியில் ஜனாதிபதி லியானமன் ஷெறோல் தலைமையிலான அரசாங்கத்தையே பிரான்ஸ் ஆதரித்து வருகிறது.

இஸ்லாமிய தீவிரவாதிகள் கைக்கு ஆட்சி போவது பிரான்ஸுக்கு விருப்பமில்லை.

அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் கைக்கு ஆட்சி மாறினால் எஞ்சிய வட ஆபிரிக்க நாடுகளில் இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் எழுச்சிக்கு அது வழி வகுக்கலாம் என்று பிரான்ஸ் அஞ்சுகிறது.

### பிரான்ஸின் 132 வருட ஆட்சி

90 சதவீதம் முஸ்லிம்களைக் கொண்ட நாடு அல்ஜீரியா.

1962 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைய முன்னர் 132 வருடகாலம் அது பிரான்ஸின் ஒரு குடியேற்ற நாடாக இருந்தது.

பிரான்ஸ் 1830 ஆம் ஆண்டு அல்ஜீரியாவைக் கைப்பற்றியது.

1847 ஆம் ஆண்டு வரை அல்ஜீரியா சரணடையாது போராடியது. 1948 ஆம் ஆண்டு வட அல்ஜீரியாவை பிரான்ஸ் தன்னுடன் இணைத்துக்கொண்டது.

1945 ஆம் ஆண்டில் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் முடிவில் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு எதிராக அல்ஜீரியாவில் பெரும் அளவில் கிளர்ச்சிகள் மூண்டன.

பிரெஞ்சுப் படைகள் பெரும் உயிரிழப்புக்களின் மத்தியில் கிளர்ச்சியை அடக்கின.

### தேசிய விடுதலை

FLN என்று அழைக்கப்படும் தேசிய விடுதலை முன்னணி 1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இந்த இயக்கம் நடத்திய விடுதலைப் போராட்டம் அரசு கவிழும் விதத்தில் பிரான்ஸிலேயே அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்தது.

1958 ஆம் ஆண்டில் பிரான்ஸில் சாள்ஸ் டிகோல் (Charles De Gaulle) நாட்டின் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் பதவி பெற்றார்.

அவர் தேசிய விடுதலை முன்னணியுடன் நடத்திய பேச்சுக்கள் பயன் அளிக்கத் தவறின.

முழு அளவிலான சுதந்திரத்தைத் தவிர வேறு எதனையும் ஏற்க தேசிய விடுதலை முன்னணி மறுத்துவிட்டது.

இதனை அடுத்து அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கும் முடிவுக்கு பிரான்ஸ் வந்தது.

1962 ஆம் ஆண்டு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை பிரான்ஸ் நடத்தியது.

அதன் தீர்ப்புக்கு இணங்க அல்ஜீரியாவுக்கு பிரான்ஸ் சுதந்திரம் வழங்கியது.

### பென் பெல்லா முதலாவது ஜனாதிபதி

1963 இல் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் அஹமட் பென்பெல்லா (Ahmed Benblela) சுதந்திர அல்ஜீரியாவின் முதலாவது ஜனாதிபதியானார். 1965 ஆம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் நீக்கப்படும் வரை அவர் பதவியில் இருந்தார். கேணல் பூமெதியன் Bournedienne) என்பவர் நாட்டின் அதிபதியானார்.

1992 இல் பல கட்சிகள் கலந்து கொள்ளும் முதலாவது சுதந்திரத்தேர்தல் நடைபெறும் வரை அல்ஜீரியாவில் ஒரு கட்சி ஆட்சி முறையே இருந்து வந்தது.

### சரித்திரம் திரும்புகிறது

அல்ஜீரியாவில் 1954—1962 காலப் பகுதியில் சுதந்திரப் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த சமயம் இருதரப்பிலும் (பிரான்ஸ் — FLN) சித்திரவதைகள், நம்பிக்கைத் துரோகங்கள், படுகொலைகள் தாராளமாக இடம் பெற்றன.

சுதந்திரத்துக்காகப் போராடிய அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணியை ''பயங்கரவாதிகள்'' என்றே பிரான்ஸ் அப்போது அழைத்து வந்தது.

இன்று அதே நிலைமை திரும்புகிறது.

போராட்டம் நடத்தும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளைப் பார்த்து ''பயங்கர வாதிகள்'' என்கிறது பதவியில் உள்ள அரசாங்கம்.

### எகிப்துக்கும் அச்சுறுத்தல்

அல்ஜீரிய ராணுவ அரசு இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்று எகிப்தின் ஹொஸ்னி முபாரக் அரசு கருதுகிறது.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கிளர்ச்சிகள் எகிப்திலும் இருந்து வருகின்றன.

எகிப்து இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கரத்தில் சிக்கினால் எகிப்து — இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்துக்கு ஆபத்து ஏற்படும் என்று இஸ்ரேல் மட்டும் அல்ல அமெரிக்காவும் அஞ்சுகிறது

அத்துடன் மொறோக்கோவில் இருந்து சவூதி அரேபியா வரையான மிதவாத அரசுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் கருதப்படுகிறது.

இன்றைய நிலையில் அல்ஜீரியாவில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் போராட்டம் வென்றாலும் அரபு உலகில் பெரும்பாலான நாடுகளின் ஆதரவை அது பெறும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் ஒரு சில நாடுகளைத் தவிர பெரும்பாலானவை மிதவாத போக்குடையவைகளே.

★

— ஞ்சாரன்

### அல்ஜீரிய சுதந்திர போராட்டம்

சுதந்திரத்துக்காக அல்ஜீரிய மக்கள் நடத்திய போராட்டம் உலக வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

இந்தப் போராட்டத்தில் சுமார் 10 லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டனர்.

குடியேற்ற நாடுகளை தொடர்ந்து வைத்திருப்பதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு பிரான்ஸைத் தள்ளியதும் அல்ஜீரிய சுதந்திரப் போராட்டமே.

## வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல்களால் உல்லாசப் பயணத்துறை முழுஅளவில் வீழ்ச்சி

உதயன் ஞாயிறு சிறப்பகம்

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புதிய முதிரைக் கதவு நிலை இரண்டு (ஆறரை அடி உயரம், மூன்றரை அடி அகலம்) விற்பனைக்குண்டு. தொடர்பு இலக்கம் 10, பேரின்பநாயகம் ஒழுங்கை (கச்சேரிக்கு அண்மையில்), யாழ்ப்பாணம், (83818)

முட்டையிடும் ஊர்க் கோழிகள், பன்டம், பாமாஸ், பிறிசில், புறாமா, சில்கி விற்பனைக்கு உண்டு. கந்தசாமி அன்சன், 16, ஆடியபாதம் வீதி, நல்லூர். (33827)

அழகிய கறுப்பு நிறம் ஆண், பெண் பொமனேரியன் நாயும், கறுப்பு நிற குட்டிகளும், சடை முயல்களும், நல்ல இன வெள்ளடியன் கோழிகளும், குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. எம். பாக்கியநாதன், மோகன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 33825)

ஐந்து போத்தல் பால் கறக்கக்கூடிய சணான் கலப்பின ஆடு நாலு மாத சினையுடனும், மூன்று மாத ஊர்க் கோழிக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. கணேஸ்வரன், இல. 24, நாவலடி லேன், பேச்சியம்மன் கோயிலடி, வண்ணார்பண்ணை. (33824)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima. Broiler குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பதிவுசெய்தும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33829)

### AL பௌதிகவியல் /95/96

தனிப்பட்ட வகுப்பாக பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். பல ஆண்டு அனுபவத்தோடு கற்பிக்கும் ஆசிரியர் R. பாலசுப்பிரமணியம் B. Sc. Dip-in-Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (33755)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் 7 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33828)

### றீகன் வாச் வேக்ஸ்

சுவர், மேசை மணிக்கூடுகள் உட்பட அனைத்து எலக்ரோனிக் மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்தி தரப்படும், பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். றீகன் வாச் வேக்ஸ், 113, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (சி-9628)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல எலெக்ரொனிக் சுவர், மேசை, ஒட்டோமெற்றிக், கடிகாரங்களையும் மற்றும் கசற் றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்களையும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள, டில்கா வாச் அன் றேடியோ, வேக்ஸ் 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி 9617)

### DOCTOR

Wanted dedicated Doctor or Medical Couple to be in charge of a Mission Hospital in Jaffna. M B. B. S. Qualification required, Experience in Maternity Preferred, Furnished Quarters with Water and other Facilities Provided. Salary Negotiable. C/O No. 955, Uthayan. (C-9630)

### வேப்பெண்ணெய்

சுத்தமான வேப்பெண்ணெய் மருத்துவ தேவைகளுக்கும், நுளம்புகளை ஒழிக்கவும் பாவிக்க உகந்த இயற்கையானதும், சிக்கனமானதுமான சாதனம் – எம்மிடம் ½, ¼ போத்தல்களில் விற்பனைக்குள்ளது. மில்க்வைற். (சி-9700)

### மணமகன் தேவை

இந்து, சைவ போசனம், வயது 29, உயரம் 5' நட்சத்திரம் சதயம், செவ்வாய் தோஷமற்ற பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்கு, ஆசிரியர் அல்லது அரச துறையில் தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு: இல. 715, மே/பா உதயன் பணிமனை யாழ்ப்பாணம். [33785]

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

### காணவில்லை

ஊசிமருந்துகளுடன் மட்டும் உயிர்வாழும் கறுப்புச் சடை பொமனேரியன் 1½ வயது நாய்க்குட்டி 18-11-94இல் காணவில்லை, கண்டவர்கள் தயவுசெய்து திருநெல்வேலி சிவன்வீதியில் உள்ள ஜெனரேட்டர் ஒழுங்கையில் வசிக்கும் பிரபாக்காவுக்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். (33826)


### சாயிபாபா பிறந்ததினம்

ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 69 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டம் திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம ஸ்ரீமத் சுவாமி சித்ரூபானந்தஜீ விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார். (சு)

### இன்று

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு இன்று யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணி ... மைப் போட்டி ... வுள்ளது. [க-36]


யாழ்ப்பாணம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மாவீரர் நினைவாலயம்

## திறப்பு விழா

21 – 11 – 1994 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து வணிகர்களையும், ஊழியர்களையும், பொது மக்களையும், போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இந்நிகழ்வில் சகல வணிகர்களும், ஊழியர்களும் கலந்து கொள்வதால் அன்றைய தினம் யாழ். நகர வணிக நிலையங்கள் யாவும் காலை 10-00 மணிக்கே திறக்கப்படும் என்பதனை சகல பொது மக்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி! வணக்கம்!

யாழ். வணிகர் கழகம்,
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

[சி-9698]


## 2ம்- ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 07 — 1923　　மறைவு: 11 — 12 — 1992

திதி: 20 — 11 — 1994

### திருமதி கோசலையம்மா நாகராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியை வறணன் அச்சுவேலி)

ஆண்டிரண்டு சென்றதம்மா!
ஆறாது எம் துயரம்
பாசம் பொழிந்தீர்கள் பரிதவிக்க விட்டீர்கள்!
ஓர்யுகம் சென்றாலும் – என்றும்
எங்கள் இதயத்தில் நிலைத்திருப்பீர்கள் ...!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

அன்புக் கணவர், மக்கள். மருமக்கள்'
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,
மைத்துனர்கள். மைத்துனி.

[8019]


## நல்லின பழமரக்கன்றுகள் விற்பனை

மாவீரர் தினத்தை முன்னிட்டு 10 வீத கழிவுடன் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனைக்கென விடப்படும் மரக்கன்றுகளின் விவரம்

- ★ ஒட்டுத்தேசி
- ★ நெல்லி
- ★ கொய்யா (1 கிலோ நிறை உடைய)
- ★ பப்பாசி (கிட்டு – 92)
- ★ ஒட்டுத் தோடை
- ★ லாவுலு
- ★ நல்லின மாங்கன்று
- ★ மாதுளை (3 மாதத்தில் பயன்தரும்)

இன்னும் விரைவில் பயன் தரும் கமுகு. தென்னம் பிள்ளை, ஏனைய பழமரக்கன்றுகளும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்;-

கிளை – 1
பூங்கினியுல் தோட்டம்,
(முதன்மைச் செயலகம் முன்பாக)
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.
மேஜர் பிரதாப் செட்டிப்பண்ணை,
இராஜ வீதி,
கோப்பாய். (சி-9702)

## பெண் முகாமையாளர் தேவை

யா/வேம்படி மகளிர் உயர் கல்லூரி
பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

கல்வித் தகைமைகள்:

1. க.பொ.த.(சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தகமும் கணக்கியலும் திறமைச் சித்தியுடன் கூடிய தராதரமும். (இரு பாடங்களும் சித்தியடைந்திருக்க வேண்டும்.)
2. கூட்டுறவுப் பயிற்சி சாதாரண தரம் சித்தியுடன் கூடிய க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகமும் கணக்கியலும் உட்பட நான்கு பாடங்களில் சித்தி.

வயது: 23 – 40
விண்ணப்ப முடிவுத் திகதி:
30 · 11 · 94

விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கல்லூரி முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

— அதிபர்
வேம்படி மகளிர் உயர் கல்லூரி
16-11-94. (சி-9705)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## விஷக்கிருமிகளை ஒழிப்போம்!

பொதுமக்கள் நலன் கருதி அமைக்கப்பட்ட வீதி விளக்குகளை விஷமிகள் சிலர் நாசப்படுத்தி வருவதைக் கண்டித்து இப் பத்தியில் இரு வாரங்களுக்கு முன்னர்தான் எழுதியிருந்தோம்.

அதற்கிடையில்—

அது போல மற்றொரு சோதனை தரும் செய்தி வெளியாகியிருக்கிறது.

யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் பொது இடங்களில்— அமைக்கப்பட்டுள்ள குழாய்க்கிணறுகளின் குழாய்கள் விஷமிகளினால் சேதமாக்கப்பட்டு வருகின்றன என்பதுதான் அந்தச் செய்தி.

விஷமிகள் சிலர் குழாய்க் கிணறுகளின் குழாய்களுக்குள் சிறிய கற்களைப் போடுகின்றனர் என்றும்—

குழாய்க் கிணறுகளின் கைப்பம்புகள் களவாடப்படுகின்றன என்றும் —

இத்தகைய சம்பவங்கள் ஒரே பகுதிகளில்தான் அடிக்கடி இடம்பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குழாய்க் கிணறுகளின் கைப்பம்புகளை ''அபேஸ்'' செய்கின்ற திருடர்களையாவது ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. திருடிய கைப்பம்பை இன்னொரு கிணற்றுக்குப் பூட்டியோ அல்லது வேறு ஒருவருக்கு விற்றோ சொற்ப லாபமீட்டலாம் என்ற எண்ணத்தில் நடக்கும் திருட்டு அது. அதற்கும் இடமளிக்கக் கூடாது என்பது ஒருபுறமிருக்க—

குழாய்க்கிணற்றுக்குள் கற்களைப் போட்டு அதனைப் பயனற்றுப் போகப்பண்ணி மூடச்செய்யும் 'மூடர்களை' என்ன செய்வது? என்ன லாபம் கருதி இத்தகைய செயலை அவர்கள் செய்கிறார்கள்? இத்தகைய நபர்களை விஷமிகள் என்பதா? அல்லது சமூகத்தை பிடித்திருக்கும் விஷக் கிருமிகள் என்பதா?

போராட்டத்தினால் நலிவுற்றிருக்கும் சமூகத்துக்கு நலிவிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களை உள்ளூராட்சி மற்றும் பொதுஅமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவை செய்து வருகின்றன.

மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் இருந்து நிதியையும் மற்றைய உதவிகளையும் திரட்டி அத்தகைய அமைப்புகள் செய்யும் சமூகப் பணியை இந்தச் சமூகம் உரிய வகையில் அங்கீகரித்துப் போற்றவேண்டும்; உற்சாகப்படுத்த வேண்டும்.

அதை விடுத்து—

அத்தகைய அமைப்புக்களுக்கு நாம் செய்யும் கைமாறுதான் குழாய்க்கிணறுகளை நாசமடையச் செய்யும் இத்தகைய செயலா?

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான தண்ணீர்த் தேவையை நிறைவேற்ற, தனக்குள்ள மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளை— ஒன்று திரட்டி செயலாற்றி வருகின்றது யாழ். மாநகராட்சி மன்றம்.

புதிய தண்ணீர் பவுஷர்களை அமைத்து அவற்றின் மூலம் கஷ்டப் பிரதேசங்களுக்கு தண்ணீரை—நன்னீரை —பெரும் பணச்செலவுக்கு மத்தியில் தினசரி அல்லது ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு நேரடியாக எடுத்துச் சென்று விநியோகித்தல்—

தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை மண்ணெண்ணெயில் இயங்கச் செய்து ஆங்காங்கே மட்டுப்படுத்தப்பட்ட அளவில்— குழாய் நீர் வழங்கல்—

முக்கியமான பிரதேசங்களில்—குடிதண்ணீர் இருக்கும் இடங்களைக் கண்டுபிடித்து — குழாய்க்கிணறுகளை அமைத்து, நிரந்தரமாக தண்ணீர் பெறுவதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்—

இது போன்ற திட்டங்களை யாழ். மாநகரசபை பெரும் நிதிச் செலவில் செயற்படுத்தி வருகிறது.

இத்தகைய நல்ல திட்டங்கள் பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அத்தகைய திட்டத்தால் பயனடையும் சமூகம் உணர்ந்து கொள்வது அவசியம்.

அதனை உணர்ந்து கொண்டு அத்தகைய திட்டங்களை சிரமிக்கும் சமூகவிரோத சக்திகளைக் கண்டுபிடித்து களையெடுக்க சமூகம் தானாகவே முன்வரவேண்டும்.

# தாம் தொடங்கிய சமாதான முயற்சிப் பாதையை சந்திரிகா தானாகவே அடைத்துவிட முயல்கிறாரா?

நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து ஸ்ரீலங்காவின் அதி உயர் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

சாதாரணமாக ஒரு வாரம் நீண்டகாலம் அல்ல. ஆனால் அரசியலில் ஒரு வாரம் ஆகக் குறைந்தது ஒரு மாதம் கடந்து போனதற்குச் சமம் எனலாம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியைப் பொறுத்தவரையில் ஒரு வார காலம் ஓர் ஆண்டு கடந்து போனதாகக் கருதக் கூடியதாகும். நிமிடத்துக்கு நிமிடம் நிலைமாறும், திடீர் திடீரென மாற்றங்கள் நிகழும் அரசியலில் கடந்த ஒரு வாரம் நீண்ட காலமே.

ஓகஸ்ட் தேர்தலில் வென்று பிரதமராகப் பதவியேற்ற போது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் இருந்த வேகமும் ஆர்வமும் ஜனாதிபதியாக வந்ததும் சந்திரிகாவிடம் குறைந்து போனதைக் காண முடிகிறது. இனப்பிரச்சினையை இயன்றளவு விரைந்து தீர்த்தால் மட்டுமே நாட்டின் ஏனைய பிரச்சினைகளை இலகுவில் களையக் கூடியதாக இருக்கும் என்ற சிந்தனையுடன் பிரதமராகச் செயற்பட்டவர் சந்திரிகா.

ஆனால் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முந்திய உற்சாகத்தையும் ஆர்வத்தை

கொழும்புப் பத்திரிகைகளும் சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவதில் அக்கறையுள்ள வேறு சக்திகளும் தீவிரமாகச் செயற்பட்டன.

அத்தகைய நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் எவ்வாறு தொடங்குவது என்பதில் தீர்க்கமான முடிவு இல்லாதவராகவே சந்திரிகா காணப்படுகிறார். ஜனாதிபதியாக பதவியேற்றதும், ''சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும். அதனை நிறுத்தக் காரண



மில்லை'' என்று அவர் வெறும் பேச்சுக்காக மட்டுமே செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார் எனக் கருத வேண்டியுள்ளது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் துணிச்சலாகவும், வேகமாக

## தலைவர் பிரபா அளித்த சந்தர்ப்பம் தவறியது

யும் கைவிட்டுவிட்டார். அவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் எந்த வகைச் செயற்பாட்டையும், ஒரு துளியைத் தானும் முதல் ஒரு வாரத்தில் காண இயலவில்லை. இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது. அதனைத் தீர்ப்பதற்கு கருமமாற்ற வேண்டும் என்ற சிந்தனையே அவருக்கு மறந்து போய்விட்டதோ என நினைக்கும் அளவுக்கு சந்திரிகா சோர்ந்துவிட்டார்!

### சிறியவர் பதுமை ஆனது ஏன்?

ஜனாதிபதி தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சி இனவாதத்தையும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு எதிரான விஷமப் பிரசாரத்தையும் செய்த போது, அவற்றை முறியடிக்கும் விதத்தில் சந்திரிகா நடத்திய பிரசாரத்தையும் தெரிவித்த கருத்துக்களையும் நோக்கும் போது, பாம்பாகச் சீறிய அவரா இப்போது பதுமையாக அடங்கிவிட்டார் என்று கேட்கத் தோன்றுகிறது!

தேர்தல் பிரசார காலத்தில் நடந்த காமினி கொலையை ஐக்கிய தேசியக் கட்சியினர் விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்படுத்தினார்கள். விடுதலைப் புலிகளே காமினியையும் ஏனையோரையும் கொலை செய்தார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமன்றி, தெற்கில் உள்ள 90 சத விதமானோரும் கருதுமளவுக்கு

வும் செயற்பட்ட சந்திரிகா, காமினி கொலையை மையமாக வைத்து, முன்வைத்த காலைப் பின்னுக்கு வைப்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல; நியாயமானதும் ஆகாது.

அதுவும், இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண வேண்டும் என்று மக்களின் அமோக ஆணைபெற்ற ஜனாதிபதி, சமாதானப் பேச்சைத் தொடர்வதற்குத் தயக்கம் காட்டுவது மக்களுக்கு இழைக்கும் பெரும் நம்பிக்கைத் துரோகமாகும்.

### பிரபா வழங்கிய சந்தர்ப்பம்

காமினி கொலையால் உண்டாகக் கூடிய தடங்கலை நீக்கி விடுவதற்கு சந்திரிகா

### அரசியல்

வுக்கு தமிழர் தலைவர் பிரபாகரன் நல்ல சந்தர்ப்பம் ஒன்றை வழங்கியிருந்தார். சந்திரிகாவின் வெற்றிக்குத் தமது நல்லெண்ண சமிக்ஞையாக ஒரு வார கால போர் இடைநிறுத்தத்தை அறிவித்திருந்தார்.

அதனை ஒரு நல்ல ஆதாரமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு சந்திரிகா சமாதானப் பேச்சுக்கான பணியை முன்னெடுத்திருக்கலாம் அதனையும் சந்திரிகா பொருட்படுத்தியதாக இல்லை. கண்டும் காணாதது போல உதாசீனம் செய்து விட்டார்.

தலைவர் பிரபாவின் போர் இடைநிறுத்த நல்லெண்ண அறிவிப்பு அரசுக்கு உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. அதனால் தான் அது விடயத்தில் அரசு அக்கறை கொள்ளவில்லை என்ற தொனியில் அமைச்சர்கள் பேசியிருப்பது வெறும் விதண்டாவாதமே.

சந்திரிகா பிரதமரானதும் நல்லெண்ண நடவடிக்கையாக தமிழர் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை தளர்த்திய போது தலைவர் பிரபாகரனுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தாரா? இல்லை.

ஆனால் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் அந்தத்

பக்க விளைவுகளைத் தோற்றுவிக்கும். சமாதான முயற்சிப் பாதை மூடப்பட்டும் விடலாம். இதுகுறித்து சந்திரிகா சிந்திக்கத் தவறியது ஏன்?

தலைவர் பிரபாவின் நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ள சந்திரிகாவால் பின்னிற்க முடியுமென்றால், ஜனாதிபதி திட்டமிடும் சமாதான முயற்சிகளுக்கு தலைவர் பிரபா ஆதரவு தராமல் பின்னடித்தால் என்ன தவறு என்ற நிலைப்பாடு—வாதம்— உருவாகும் என்பதனைச் சந்திரிகாவால் உணர முடியாமற் போய்விட்டதா?

அப்படியானால் சந்திரிகாவிடம் தலைமைத்துவத் திற

தனமும், பேடித்தனமும் நிறைந்ததாகும். போர் இடை நிறுத்தத்தைக் கேலி செய்வது போல பொது மக்களையும், விடுதலைப் புலிகளையும் தாக்கியிருக்கிறார்கள். நேருக்கு நேர் தாக்குதல் எதுவும் இன்றி பதுங்கி இருந்து தாக்கும் உத்தியைக் கடைப்பிடித்து விடுதலைப் புலிகளின் தளபதி மல்லியைக் கொன்று அவரின் தலையையும் கோரமாக வெட்டிச் சென்றுள்ளனர்.

இது போன்ற மோசமான கொடூரங்கள் போர் இடை நிறுத்த நல்லெண்ணத்தை கிண்டல் செய்வதாக மட்டுமன்றி, அரசின் மீது வெறுப்படையச் செய்யும் செயல்களா

லெண்ணம் என்று கூறி போர் இடைநிறுத்தம் செய்தார்கள் என்ற கருத்தை விஷமத்தனமாக அரசுக்கும் சந்திரிகாவுக்கும் ஊட்டுவதே அக்கறையுடைய அந்தச் சக்திகளின் நோக்கம் என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளுடன் ஆரம்ப சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர், சந்திரிகா அப்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் ''சொல்லாமல் கொள்ளாமல்'' சிங்



கப்பூர் சென்றிருந்தார்.

அது குறித்து கொழும்பில் சர்ச்சை எழுந்த போது, 'தனிப்பட்ட முறையில் ஓய்வு எடுப்பதற்கு எனக்கு உரிமை இல்லையா'' என்று கேட்டவர் சந்திரிகா.

## ஜனாதிபதியான முதல் வாரத்தில் விரோத சக்திகளிடம் தோற்றார்

தகவல் தெரிந்ததும் போர்க் கைதிகள் பத்துப்பேரை விடுவிப்பதாகத் தலைவர் பிரபா தமது பதில் நல்லெண்ணத்தைக் காண்பித்தார். அதன் பின்னர் எழுதிய நன்றிக் கடிதத்திலேயே சந்திரிகா தாம் பொருளாதாரத் தடையைத் தளர்த்தியது குறித்து எழுத்தில் போட்டார்.

எனவே தலைவர் பிரபா தமது நல்லெண்ண நடவடிக்கையை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. அதனால் தான் அது குறித்து அரசு அக்கறை காட்டவில்லை, பதில் நல்லெண்ணத்தை தெரிவிக்கவில்லை, அதற்கான செயற்பாட்டில் இறங்கவில்லை என்று கூறுவது எல்லாம் வெறும் சப்புக்கட்டாகும்.

தலைவர் பிரபாவின் நல்லெண்ண நடவடிக்கையை உலகத்தில் உள்ள வானொலிகள், தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் யாவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. கொழும்புப் பத்திரிகைகள் அரசாங்கப் பிரசார சாதனங்கள் என்று யாவுமே தலைவரின் நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்தி இருந்தன.

### அரசதரப்பின குதர்க்கம்

தலைவர் தமது தளபதிகளுக்கு விடுத்த பணிப்புரையை ஒற்றுக்கேட்டு பகிரங்கப்படுத்தியதே அரசாங்கத்தின், பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுப் பிரிவுதான். அப்படியிருக்க அது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்புக் கிடைக்கவில்லை; அதனால் எம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கூறினால் அது பெரும் குதர்க்கம் ஆகும்.

இங்கே, மந்திரிப் பிரதானிகள், ஆலோசகர்கள் எதனைக் கூறியிருப்பினும் ஜனாதிபதி சந்திரிகா ஒரு முக்கிய விடயத்தைக் கருத்தில் [illegible] தவறிவிட்டார். நல்லெண்ண அறிவிப்பு வந்திருப்பது தலைவர் பிரபாகரனிடம் இருந்து என்பதைக் கவனிக்கவில்லை, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தாம் நேரில் சந்தித்துப் பேசப் போவதாகக் கூறிய தலைவர் பிரபாகரனிடம் இருந்து கிடைத்த நல்லெண்ணத்தை அசட்டைப்படுத்தியது பெரும்

மையும், ஆளுமையும் உண்டு என்பதனை எப்படி நம்புவது? வெறும் மேடைக் கவர்ச்சியாலும், அரசாங்க மாற்றம் ஒன்று தேவை என்று முடிவு செய்த சிங்கள மக்களின் நிலைப்பாட்டினாலுமே சந்திரிகா தலைமைப் பதவிக்கு வர முடிந்தது என்று கருதுவதா?

### சந்தர்ப்பம் தவறியது

சந்திரிகாவிடம் சுயமாகவே ஆற்றலும், ஆளுமையும், திறமையும் உண்டெனில், அவர் தலைவர் பிரபாவின் நல்லெண்ணத்தை வேண்டுமென்றே உதாசீனம் செய்தார் என்பதே அர்த்தம். மனம் இருந்தால் இடமிருக்கும். தலைவர் பிரபாவின் நல்லெண்ணத்தைத் தக்கவாறு பயன்படுத்தி சமாதானக் கோட்டையைக் கட்டும் தூண்களில் ஒன்றாக நிறுத்தியிருக்க வேண்டிய ஜனாதிபதி, ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டார்!

அவரது இந்த உதாசீனம், பின்னடிப்பு, நிலை மாற்றம் என்பன இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது என்ற தமது விருப்பத்துச்குத் தாமே தடையாக இருக்கும் ஒரு நிலையைத் தோற்றுவித்து விட்டது. ஆக்கியவனே அழிக்கும் ஒரு நிலை வந்த பின்னர் சமாதானத் தீர்வு என்பது வெறும் கானல் நீராகவே காட்சி தரும். அதற்குக் காத்திருந்து சிங்கள மக்களும் தமிழ் மக்களும் கண் பூத்தும் பார்வை மறைய வேண்டியது தானா?

தலைவர் பிரபாவின் நல்லெண்ணத்துக்குப் பதிலாக உத்தியோகபூர்வமாக வெளிப்படையாக எதனையும் செய்யாவிட்டாலும் கூட, விடுதலைப் புலிகளின் போர் இடை நிறுத்தத்தின் போது இராணுவத்தின் அடாவடித்தனங்களை நிறுத்துமாறு உத்தர விட்டிருக்கலாம்.

இந்த ஒரு வார காலத்திலும் இராணுவம் நடந்து கொண்ட விதம் கோழைத்

கவும் அமைகின்றன. இவை மொத்தத்தில் சமாதான முயற்சிகளை முற்றாக மறக்கச் செய்யும் சூழ்ச்சி என்பதனை சந்திரிகா இப்போது உணரத் தவறினாலும் பிறகு உணர நேரிடும்.

### சந்திரிகா தோற்றார்

காமினி கொலையால் பதற்றப்பட்டுப் போன சந்திரிகாவின் பலவீனத்தை சமாதானத்துக்கு விரோதமானவர்கள் தக்கபடி பயன்படுத்தி

## அமோக வாக்கு வெற்றி நிலைமாறச் செய்ததா?

வெற்றி கண்டிருக்கிறார்கள். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற உறுதியான நிலையில் இருந்த சந்திரிகாவைத் தோல்வியுறச் செய்து விட்டார்கள் என்பதே கடந்த வார நிகழ்வுகளின் முடிவு.

விடுதலைப் புலிகள் போர் இடைநிறுத்தம் செய்துள்ளார்கள் என்பதனை அறிந்த சமாதான விரோத சக்திகள் அச்சமடைந்தார்கள். சந்திரிகா அதனை தக்கவாறு ஏற்றுக்கொண்டு சாதகமாக நடந்தால் மக்கள் எதிர்பார்க்கும் சமாதானத்துக்கான முயற்சிகள் மேலும் பலமடைந்து விடும் என்று உணர்ந்தார்கள்.

அதனைத் தடுக்க வகுத்த சூழ்ச்சியின் அம்சங்களே போர் இடைநிறுத்த நேரத்தில் நடத்தப்பட்ட மோசமான இராணுவத் தாக்குதல்களும், விடுதலைப் புலிகளுக்கு மேற்காசியாவிலிருந்து பத்து தொன் ஆயுதங்களுடன் கப்பல் வடக்கு நோக்கி வருகிறது என்ற திடீர் 'கதையும்'!

இப்போது அந்தக் கப்பல் மாயமாக மறைந்துவிட்டதாக கதையை முடித்திருக்கிறார்கள்! புலிகளின் ஒரு வார கால போர் இடைநிறுத்தமும் முடிந்து விட்டதால் இனி ஆயுதக் கப்பலின் கதையும் மறந்து போய் விடும்!

### சூழ்ச்சி வென்றது

அவர்கள் கட்டிய கதையின் கப்பலில் வரும் ஆயுதங்களை இலகுவாக இறக்குவதற்காகவே விடுதலைப் புலிகள் நல்

ஆனால் அவர் அங்கு சென்றது அயல்நாட்டு உயர் அதிகாரி ஒருவரைச் சந்தித்து, பேச்சுவார்த்தைக்கு அவர்களின் ''அனுமதி'' ''ஆசி'' பெறுவதற்காகவே என்று அப்போது பரவலாகப் பேசப்பட்டது!

இப்போதும் சமாதானப் பேச்சை மீண்டும் தொடங்குவதற்கு முன்னர் அதே தரப்பினரின் அனுமதி பெறுவதற்காகத்தான் காலத்தைக் கடத்துகிறார் என்றும் ஒரு பேச்சடிபடுகிறது.

உண்மை ஒரு காலம் தெரியவராமலா போய்விடும்?

ஆக மொத்தத்தில் —

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை

உதயகாந்தன்

நடத்துவதை விரும்பாத உள்நாட்டுச்சக்திகள், இராணுவத்தில் உள்ள சக்திகள், ஆயுதக் கப்பல் வருவதாக கதைவிட்ட வெளிநாட்டுச் சக்திகள் போட்ட கூட்டுச் சூழ்ச்சி வென்றுவிட்டது. சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதல் வாரத்திலேயே அவர்களுக்கு முதல் வெற்றி. சந்திரிகாவுக்கு முதல் தோல்வி. முதற் கோணின் முற்றும் கோணும். எனவே சமாதானம்... இனித் தேடித் திரிய வேண்டிய ஒன்றாகவே மாறுமா...?

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்

## மட்டக்களப்பில் குளங்கள் பல உடைப்பெடுக்கும் அபாயநிலை

### 2, 500 ஏக்கர் வயல் நீரில் மூழ்கியுள்ளது

கொழும்பு, நவ. 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழையால் குளங்கள் பலவும்உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

உன்னிச்சை குளத்தில் 28 அடியும், ஊர்காமம் குளத்தில் 16 அடியும், வாகனேரி குளத்தில் 19 அடியும், நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதேவேளை வேறு 33 சிறிய குளங்களும் உடைக்கும் நிலையில் உள்ளன.

குளங்கள் உடைப்பெடுப்பதை மண்மூடை கொண்டு தடுக்கும் நடவடிக்கைகளுக்காக 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நீரில் மூழ்கியுள்ளது.

## லஞ்சம் வாங்கிய மருதானை கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டர் தலைமறைவு

கொழும்பு, நவ. 20

அடையாள அட்டை பெற்றுத் தருவதாகக் கூறி லஞ்சம் வாங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட மருதானைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் தலைமறைவாகி விட்டனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இப் பொலிஸாருக்கு எதிரான லஞ்ச முறைப்பாடுகளை லஞ்சத் திணைக்களம் விசாரிக்கதொடங்கியபின் அவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என்று [illegible] கிறது. (ஒ-எ)

## ஆலயங்களில்

யாழ். கொய்யாத்தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்த உற்சவத்தின் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தல் இன்று ஞாயிறு காலை 6-30 [illegible] தொடர்ந்து கிறிஸ்து அரச [illegible] பெறும். [க-30]

## பிரதி அமைச்சர்களாக 5 புதியவர்கள்

கொழும்பு, நவ 20

பிரதி அமைச்சர்கள் நியமனம் செய்யப்படும் போது ஐந்து புதுமுகங்கள் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம். பி.க்களான லஷ்மன் கிரியெல்ல [கண்டி], டபிள்யு. டி. ஜே. செனவிரத்னா [குருநாகல்], ஹேமா இரத்னாயக்கா [பதுளை], பிரியங்கினி அபேதீர [களுத்துறை] ஆகியோர் புதிய பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்று அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். செயலகத்திலும் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. [ஒ-100]

## இன்று நடைபெறவுள்ள சிரமதானங்கள், கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு குடாநாட்டில் இன்று சனிக்கிழமை இரவு எழுச்சிக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:

★ கோப்பாய் வட்டம் — உரும்பிராய் ஞான வைரவர் கோயிலடி.

★ உடுவில் வட்டம் — மாவீரர் முகாம், கந்தரோடை ஆலடிப் பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக் கட்டுவன் சந்தி

★ பளை வட்டம் — முகமாலை பொந்தர் குடியிருப்பு.

★ தீவகக் கோட்டம் — துரட்டிப்பனை குடியிருப்பு, பூதராசி குடியிருப்பு.

### சிரமதானம்

இன்று சிரமதானம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:

பளையில் — இத்தாவில் குணா அறிவகம் சூழல் துப்புரவு.

★ தீவகக் கோட்டம் — சுழிபுரம் பாணாவெட்டி மாவடி துரட்டிப்பனை மானிப்பாய் செல்லமுத்து, அட்டகிரி குடியிருப்புகள். (க)

## பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், நவ. 20

கெருடாவில் தெற்கு கிராமிய உற்பத்திக் குழுப்பிரிவில் அண்மையில் ஆயிரம் பனை விதைகள் நடுகை செய்யப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த பனை விதை நடுகை நிகழ்வு அப்பகுதி கிராமிய உற்பத்திக் குழு தலைவர் தலைமையில் இடம் பெற்றது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST. JOHN'S
PARISH NURSERY SCHOOL
பரி. யோவான் ஆலய
பாலர் பாடசாலை
சுண்டிக்குளி.

1995ஆம் ஆண்டுக்குரிய அனுமதிக்கான விண்ணப் பப் படிவங்கள் ஆலய காரியாலயத்தில் பெற்று, விண் ணப்பிக்கப்பட வேண்டிய இறுதி நாள் 30-11-94 என்பதை அறியத் தருகிறோம்.

– Parish Priest.

[33802]

## 3ஆம் ஆண்டு, 1ஆம் ஆண்டு
## நினைவஞ்சலி



C. S. நாயகம் செல்வநாயகி

[ஓய்வுபெற்ற புகையிரத அதிபர் (மலேசியா)]

மண்ணில்: 03-10-1901 23-07-1901
விண்ணில்: 28-01-1991 20-11-1993

அனைவருக்கும் மீட்பளிக்க அவனியில் மனுவுருவான யேசுவே! எங்களை நீண்ட காலம் பராமரித்து அன்பு செய்த எங்கள் மம்மி, பப்பா, செல்வநாயகி, சவுந்தரநாயகம் முடிவில்லாத வாழ்வில் பங்குகொண்டு முழுவாழ்வு பெறச் செய்வீர்களாக ஆமென்!

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 21-11-1994 திங்கட்கிழமை காலை பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திலும், பரி. அடைக்கலமாதா ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும், புனித யுவானியார் ஆலயத்திலும், திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"பத்திமா இல்லம்",
பத்தாவத்தை, இளவாலை.

தகவல்: மரியோ செல்வா,
(பேரன் U. K.)

[8018]

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசையா

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசையா 19-11-1994 இல் காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினம் (நியூகணேசானந்தா), மகாலட்சுமி, பராசத்தி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சுப்பிரமணியம், குமாரசுவாமி, யோகம்மா மற்றும் பொன்னுத்துரை, செல்லமுத்து ஆகியோரின் சகோதரரும், இந்திரசித்து (லலிதா ஜூவலறி), பவளகாந்தன், விஜயலட்சுமி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 20-11-94 காலை 9-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. இராசரத்தினம்.
(மகன்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

[33830]

### மாணிக்கம் கந்தையா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மா. கந்தையா 19-11-1994 அன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ராஜன் (Bar) புஸ்பராணி, சாந்தினி (கலா-ஜேர்மனி), ராஜன் பாபு (ஜேர்மனி), சுகிர்தா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, நாகலிங்கம், செல்லாச்சி மற்றும் இராசதுரை, லட்சுமி, இராசு ஆகியோரின் சகோதரரும், மா. நவரத்தினராஜா (நவம்), மோகனா, ஜீவராணி ஆகியோரின் மாமனாரும் சாரு, சிந்து, நிரோ, நீலிகா, நிலானி, துசல்ஜன், துஷாலினி ஆகியோரின் அன்புப்பேரனும், ராஜன் (ஜேர்மனி), சாந்தன் (ஜேர்மனி), வெள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20-11-1994 இன்று 12-00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மா. ராசன் (BAR)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்,
கல்திட்டி.

[8023]

## புலிகளின் குரல் வானொலியில்

20 — 11 — 1994
ஞாயிறு இரவு

★ 8-01 — புலிகளின் குரல் வானொலியின் 4 ஆம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — புலிகளின் குரல் வானொலியின் 4 ஆம் ஆண்டு நிறைவையொட்டி உருவான பாடல்கள்
★ 9-00 — இரவு நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

21 — 11 — 1994
திங்கள் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி - தமிழீழன் எழுதிய "உதயத் தமிழீழம் நல்க உயிர் கொடுத்த மாவீரர்"
★ 8-00 — மணி முதல் 9-30 வரை மாவீரர் வார ஆரம்ப நாளையொட்டியும் தமிழீழ தேசியக் கொடியேற்றல் நிகழ்வையொட்டியும் விசேட ஒலிபரப்பு.
★ 9-30 — காலை ஒலிபரப்பு நிறைவுபெறும்.

## புலிகளின் குரல் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 20

புலிகளின் குரல் வானொலியின் நான்காவது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படுகிறது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நிதர்சனம் பொறுப்பாளர் திரு. நா. தமிழன்பன் தலைமையில் நிறைவு விழா பி. ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

திரு. நா. சண்முகலிங்கன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

நாடகம், நாட்டிய நாடகம் வாத்யப்பிருந்தா, சிறுவர் நிகழ்வு ஆகிய கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பரிசில்களை வழங்குவார். (அ)

## யாழ். நகரில் வெளிநாட்டு செய்தியாளர்கள்

வடமராட்சி, நவ. 20

வெளிநாட்டு தொலைக்காட்சிச் செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் அடங்கிய ஐவர் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

இக்குழுவினர் கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி வந்து காங்கேசன்துறை ஊடாக "ஹபரண" கப்பலில் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

இந்த ஐவரில் 'ரைம்' சஞ்சிகையின் புதுடில்லிச் செய்தியாளர் அனிதா பிரதாப்பும் ஒருவர். (இ-173)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகள் வருமாறு:-

**யாழ். பல்கலைக்கழக மைதானம்**

காலை 8-30மணி யாழ் இந்துக்கல்லூரி எதிர் புனித சாள்ஸ் (19வயது)

யாழ். இந்துக்கல்லூரி எதிர் அராலி. இந்துக்கல்லூரி (17 வயது)

**யாழ். மத்தியகல்லூரி மைதானம்**

பி. ப. 2-00மணி ஏழாலை சிறிமுருகன் எதிர் விக்டோறியா கல்லூரி (15 வயது)

பி.ப. 3-00மணி கரணவாய் பொன்னம்பலம் எதிர் யாழ். இந்துக்கல்லூரி (15வயது)

பி. ப. 4-00மணி உரும்பிராய் இந்து எதிர் சாவகச்சேரி இந்து (15வயது)

(ஓ-20)

## 7ஆம் ஆண்டு
## நினைவலைகள்



அமரர் சின்னர் இராசதுரை

மலர்வு: 1939 10-01 உதிர்வு: 1987-11-20
திதி: 1994-11-20

எங்கள் தந்தையே! எங்கே இருக்கின்றீர்
பாரினில் நாம் வாழப் பார்த்திருப்பீர்-
என்றிருந்தோம்.
பாதியில் எமைவிட்டு பிரிந்து விட்டீர்
பாசத்தை பொழிந்து பண்புடன் வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது சென்றுவிட்டீர்
பாவிகள் நாங்களிங்கு பரிதவிக்கின்றோம்
உங்களை நினைந்து உணர்விழந்து வாடுகின்றோம்.
பொய்யான இந்த உடல் எமைவிட்டு பிரிந்தாலும்
மெய்யான உங்களுயிர் எம்மோடு இருக்குதப்பா
7(ஏழு) ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நினைவு உங்களை விட்டு அகலாது.

ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: இரத்தினபூபதி
பிள்ளைகள்: பிறேம் (சுவிஸ்),
பிறேமினி,
பிரிந்தினி, கோபி.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(33815)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் ... 20-11-1994 இல் ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆனைப்பந்தியில் மாவீரர் நினைவாலயம்

யாழ். வணிகர் கழகம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள மாவீரர் நினைவாலயத்தின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். (க)

## 20 அதிகாரிகள் விசாரணையில்!

முன்னைய அரசாங்கக் காலத்தில் அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் நண்பர்களுக்கும் துப்பாக்கிகள் வழங்கப்பட்டது தொடர்பாக பாதுகாப்பு மற்றும் அரச துறைகளை சேர்ந்த 20 அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தப்பட உள்ளனர்.

கொழும்பு பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டது.

### மாவீரர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி வட்டம் — தபாற்கந்தோர் சந்தி, நகரசபை வளவு.

கொடிகாம வட்டம் — புகையிரத நிலையம் முன்னால்.

பளை வட்டம் — இரட்டைக்கேணி அம்மன் கோவில் முன்றில்.

**நீவகக் கோட்டம்**

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு, நாவற்குழி லவனிதா குடியிருப்பு, அரியாலை டயஸ் குடியிருப்பு, அரியாலை மணியரசன் குடியிருப்பு, அரியாலை சாம்சன் குடியிருப்பு, ஸ்ரீபன் (யாழ். புகையிரத நிலையம்) குடியிருப்பு, முஸ்லீம பகுதிக் குடியிருப்பு, நவாலி மயூரன் குடியிருப்பு, வழக்கம்பரை சத்தியக்காடு குடியிருப்பு, சங்கானை நீதிவான் குடியிருப்பு, சுழிபுரம் பாணாவெட்டிக் குடியிருப்பு, வட்டு. துணைவி குடியிருப்பு, வடக்கம்பரை பூதராசிக் குடியிருப்பு, சித்தன்கேணி குந்தவி குடியிருப்பு, வட்டு. கலட்டி குடியிருப்பு.

மேலும், மாவீரர் வார ஆரம்ப நாளில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவதற்கு வட்டச் செயலகங்களில் தமிழீழ தேசியக் கொடிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

அதேபோல் தமிழீழ மக்கள் தமது வட்டச் செயலகங்களில் மாவீரர் பொதுச் சின்னத்தைப் பெற்றுப் பந்தல் அமைத்து மலர் மாலை அணிவித்துச் சுடரேற்றி தமிழீழ மாவீரர்களுக்கான வீரவணக்கத்தை மாவீரர் வாரத்திலும், மாவீரர் நாளிலும் செலுத்தலாம் என்றும் — யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவிக்கின்றார்கள். (இ)

### ஹபரண...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு எடுக்கப்படவிருப்பதால், உடன் கப்பலை கொழும்புக்கு திரும்புமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் கப்பலில் இன்னும் அரைவாசிப் பொருள்கள் இறக்க வேண்டியுள்ளதால், அதை இறக்கிய பின்னர் கொழும்புக்கு கப்பலை அனுப்ப அனுமதி வழங்குமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு கொழும்புக்கு தகவல் அனுப்பியுள்ளது. (இ-3)

### 1 வார...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்களைச் செய்யாததன் மூலம் விடுதலைப்புலிகளின் நல்லெண்ண அறிவிப்பை அரசு உதாசீனம் செய்திருப்பதையும் —

"புலிகளின் குரல்" சுட்டிக் காட்டியது.

இதற்கிடையில் —

விடுதலைப் புலிகள் தாங்கள் அறிவித்த ஒருதலைப் பட்ச சண்டை நிறுத்தத்தை கைவிட்டு விட்டதாக அறிவித்துள்ளனர் என்று தமிழ் வட்டாரங்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

ஆனால் இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

அதே சமயம், விடுதலைப் புலிகளின் ஒருதலை 'பட்ச போர் இடைநிறுத்தத்துக்கு ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து சரியான முறையில் பிரதிபலன் காட்டப்படவில்லை என்று வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டி உள்ளனர்.

### மாவீரர்வாரத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். மாவீரர் வாரம் முடிவுற்ற பின்னர் ஆயுதப்படையினர் தயாரில்லாத வேளையில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வர்." — இவ்வாறு புளொட் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மாத இறுதியில் பேச்சு என்கிறது 'லங்கா தீப'

கொழும்பு, நவ. 20

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை இம்மாத முடிவுக்குள் மீண்டும் ஆரம்பமாகவிருக்கிறது.

அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்கா தீப சிங்கள நாளிதழ் இத்தகவலை நேற்று வெளியிட்டது. (இ-எ)

## பாஷையூரில் லயன்ஸ் வைபவம்

யாழ். லயன்ஸ் கழகம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு இன்று இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்குகிறது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பாஷையூர் பங்கு மண்டபத்தில் இது தொடர்பான வைபவம் நடைபெறும்.

இந்த நிகழ்வின் போது வைத்திய கலாநிதி சிவபாலன் நீரிழிவும் அதனைத் தடுக்கும் முறைகளும் என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு நிலையத் தலைவர் பா. வின்சன்ட் தலைமைவகிப்பார். திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (இ)

## முக்கிய அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், வலி. வடக்குப் பிரிவு ஆண்டுப் பொதுக்கூட்டமும், தேர்தலும் ஒத்திவைப்பு.

இன்று (20-11-1994) நடைபெறவிருந்த மேற்படி கூட்டமும், தேர்தலும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளன. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கௌரவ செயலாளர்
வலி. வடக்குப் பிரிவு

(33838)

## மரண அறிவித்தல்கள்

### சேனாதி சண்முகநாதன்
[கிளி]

அத்தியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும்கொண்ட சேனாதி சண்முகநாதன் (கிளி) அவர்கள் (18-11-94) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் திருமதி லீலாவதி அவர்களின் அன்புக் கணவரும், சிவராஜா, யோகராஜா (ஆனந்தி-உரிமையாளர், சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, றஞ்சினி ஜெயதாஸ் (உரிமையாளர், ஜெயா பல்பொருள் வாணிபம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சி. இராஜமணி, திரு. மனோகரன் (லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி யோ. சிவனேஸ்வரி, திரு. ஸ்ரீகாந்தன் (செந்தூரன், உரிமையாளர் காவேரி மருந்தகம் கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிலி, ஷர்மிளா, சஞ்ஜீர், சஞ்ஜீத், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, துஷாந், நிருஜலா, ஷகிலா, சுவேனித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா [ஆனந்தி]
[மகன்]
(சிவானந்தா கபே
நல்லூர்)

50/23, செட்டித் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(33835)

### இராசேந்திரம் ஸ்ரீபதி
(ஓவியர்)

இல. 690, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் ஸ்ரீபதி நேற்றுக் காலமானார். இவர் டாக்டர் அமுதபூபதியின் அன்புக் கணவரும், சாந்திபூசன், இமயகாந், விஜயகாந், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேந்திரம் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மைந்தனும் மீனலோஜனி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, அருந்ததிதேவி (சுலோசனா), ரகுபதி, வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜேசுதாசன், அலெக்சாண்டர் (கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், காத்யாயினி, துஷ்யந்தன், துளசிகாந், வாகீசன், சஞ்சீவ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 3.00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி டாக்டர் அமுதபூபதி
(மனைவி)

(33837)

### ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்
(முறிவு வைத்தியர், ஏழாலை)

ஏழாலை மேற்கு ஐயம்பிள்ளை வைத்திலிங்கம் (19-11-1994) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பேரின்பநாயகம் (காசாளர், சுன். ப.நோ.கூ.ச.), புஸ்பராணி, பாலச்சந்திரன் (ஜேர்மனி), திருமதி கனகாம்பிகை நாகராஜா (பிரதேச செயலகம் நல்லூர்), கெங்காதரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, சற்குணராஜா (மின்வளம்), செல்வநாயகி (இந்தியா), நாகராஜா (கணக்காளர் பிரதேச செயலகம், தெல்லிப்பளை), இராஜமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
செ. நாகராஜா
(மருமகன்)

"தர்ஷிஸ்தான்",
கருவேம்பன்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(33386)